**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.91/2018**

2025ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.S.இராமச்சந்திரன், B.L., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - திரு.ஜோதிபிரகாஷ் | **PW-45** | ஜாதி | ------------- |
| த/க பெயர் | - கந்தையா | | தொழில் | - |
| கிராமம் | - | | சமயம் | - |
| தாலுக்கா | - | | வயது | - 49 |

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் தற்பொழுது கோவை மாவட்டம், அன்னூர் வட்டம், அல்லப்பாளையம் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பாக 2013 ஆம் ஆண்டு நான் கோயமுத்தூர் மாவட்டம், கோவை வடக்கு வட்டம், கணபதி மேற்கு கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வந்தேன். கடந்த 19.01.2013 அன்று காலை 9.00 மணியளவில் தாலுக்கா அலுவலகத்தில் இருந்து எனக்கு போன் மூலமாக சிபிசிஐடி அலுவலகத்திற்கு விசாரணைக்காக ஆஜராகுமாறு தலைமையிடத்து துணை வட்டாட்சியர் அவர்கள் எனக்கு தகவல் தெரிவித்தார். அதன் அடிப்படையில் நான் மேற்படி சிபிசிஐடி அலுவலகத்திற்கு காலை 10.00 மணி அளவில் சென்றேன். நான் அங்கு சென்ற சமயம் அதே வட்டத்தைச் சேர்ந்த புளியகுளம் கிராம நிர்வாக அலுவலர் திரு.குருசாமி என்பவரும் அங்கிருந்தார். மேற்படி அலுவலகத்தில் காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் காவலர்கள் இருந்தார்கள். அங்கு காவல்துணை கண்காணிப்பாளர் இரண்டு நபர்களை அடையாளம் காண்பித்தார். அதில் ஒருவர் பெயர் வெங்கடேசன், மற்றொருவர் பெயர் சிவகுரு என்றும் சொன்னார். மேற்படி துணை காவல் கண்காணிப்பாளர் என்னிடம் டிஎன்பிஎஸ்சி வினாத்தாள் கசிவு சம்பந்தமாக மேற்படி இருவரையும் போலீஸ் கஸ்டடியில் எடுத்திருப்பதாகவும், எனவே அவர்களை விசாரிக்க வேண்டும் என்றும் அதற்கு எங்களை சாட்சியமாக இருக்கும்படி கேட்டுக் கொண்டார். அன்று 12.30 மணியளவில் வெங்கடேசன் என்பவரை விசாரித்தார் அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை கொடுத்தார். அதில் அவர் தன்னுடைய பெயர் வெங்கடேசன் என்றும் தன்னை வெங்கட் மற்றும்

வெங்கி என்று அழைப்பதாகவும், தனக்கு எந்த வகையில் இந்த குற்ற சம்பவத்தில் ஈடுபாடு உள்ளது மற்றவர்களுக்கும் தனக்கும் என்ன தொடர்பு என்பது குறித்தும் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். மேலும் 2012 ஆம் ஆண்டில் நடந்த குரூப் 2 டிஎன்பிஎஸ்சி தேர்வில் தனது பங்கு என்பது குறித்தும் சிவகுருவின் நண்பர் ஐயப்பன் என்பவர் மேற்படி டிஎன்பிஎஸ்சி குரூப் 2 தேர்வின் வினாத்தாள் தொடர்பான தொகை கொடுக்கவில்லை என்பதால் பணத்திற்கு பதிலாக அசல் பி.காம் சான்று, மார்க் சீட் இரண்டையும் வாங்கி தன்னிடம் கொடுத்ததாகவும், மேற்படி இரண்டு சான்றுகளில் மார்க் சீட் மற்றும் ஏற்கனவே கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்த சமயத்தில் கோர்ஸ் கம்ப்ளீஷன் சர்டிபிகேட் இருப்பதை மறைத்து விட்டு சொல்லாமல் விடுபட்டு விட்டதாகவும் தற்பொழுது தன்னை தனது வீடான சென்னை பட்டினப்பாக்கத்திற்கு அழைத்துச் சென்றால் அதை எடுத்து தருவதாக வாக்குமூலம் கொடுத்தார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், குருசாமி கிராம நிர்வாக அலுவலர் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் **அ.சா.ஆ.**54. (ஏற்கனவே எதிரியை கைது செய்த நாளில் கண்டறிந்த சங்கதிகள் பற்றி மீண்டும் கண்டறிந்ததாக வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாக சொல்லும் நிலையில் எதிரி தரப்பில் சாட்சியின் மேற்படி சாட்சியத்தை பதிவு செய்ய ஆட்சேபிக்கப்பட்டது. ஆட்சேபனைக்குட்பட்டு மேற்படி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது) பின்னிட்டு மாலை 4.30 மணி அளவில் மற்றொரு நபரான சிவகுரு என்பவரை விசாரித்த சமயம் அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதில் அவர் தன்னுடைய பெயர் சிவகுரு என்றும் தனக்கு எந்த வகையில் இந்த குற்ற சம்பவத்தில் ஈடுபாடு உள்ளது மற்றவர்களுக்கும் தனக்கும் என்ன தொடர்பு என்பது குறித்தும் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். மேற்படி சிவகுரு என்பவரும் தனது நண்பரின் உறவினரான கோமதி என்பவரிடம் அவருடைய பத்தாம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு அசல்பட்டியலை பெற்று அவருடைய வீட்டில் வைத்திருப்பதாகவும் அவரது வீடு கடலூர் மாவட்டம், பண்ருட்டி தாலுகா, பத்திரக்கோட்டை என்ற இடத்தில் இருப்பதாகவும் அங்கு அழைத்துச் சென்றால் மேற்படி ஆவணத்தை எடுத்து தருவதாகவும் வாக்குமூலம் கொடுத்தார். ஏற்கனவே கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்த சமயத்தில் கோர்ஸ் கம்ப்ளீஷன் சர்டிபிகேட் இருப்பதை மறைத்து விட்டு சொல்லாமல் விடுபட்டு விட்டதாகவும் மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் குருசாமி கிராம நிர்வாக அலுவலரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம் என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவதாக உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான் மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.**55. (ஏற்கனவே எதிரியை கைது செய்த நாளில் கண்டறிந்த சங்கதிகள் பற்றி மீண்டும் கண்டறிந்ததாக வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாக

சொல்லும் நிலையில் எதிரி தரப்பில் சாட்சியின் மேற்படி சாட்சியத்தை பதிவு செய்ய ஆட்சேபிக்கப்பட்டது. ஆட்சேபனைக்குட்பட்டு மேற்படி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது) பின்னிட்டு அன்று இரவு நாங்கள் காவல் அலுவலகத்தில் இருந்து மேற்படி எதிரிகள் இருவரும் நானும் கிராம நிர்வாக அலுவலர் குருசாமி, டிஎஸ்பி மற்றும் காவலர்களுடன் எதிரி வெங்கடேஷ் என்பவரது வீடான மடிப்பாக்கத்திற்கு சென்றோம். அவர் தனது வீட்டில் அலமாரியில் இருந்து ஐயப்பன் என்பவரது பி.காம் கோர்ஸ் கம்ப்ளீசன் சர்டிபிகேட் சான்றை அசல் சான்று எடுத்துக் கொடுத்தார். அதை டிஎஸ்பி மகஜரில் 20.01.2013 அதிகாலை 3 மணி அளவில் எங்கள் முன்பாக கைப்பற்றினார் என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் உள்ள முதலாவது சாட்சி கையெடுத்து என்னுடையது தான் என்னுடன் குருசாமி என்பவர் கையெழுத்து போட்டார் கைப்பற்றுதல் மகஜார் **அ.சா.ஆ.**56. என்னிடம் காண்பிக்கப்படும் பி.காம் கோர்ஸ் கம்ப்ளீஷன் சர்டிபிகேட் தான் அவ்வாறு கைப்பற்றப்பட்டது மேற்படி ஆவணம் **அ.சா.ஆ.**57. பின்னிட்டு சிவகுருவின் வீடான பத்திரக்கோட்டை பகுதிக்கு அழைத்துச் சென்றார். அவரது வீட்டில் இரும்பு பெட்டியில் வைத்திருந்த கோமதி என்பவரது பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு மதிப்பெண் சான்றுகளை அசல் ஆவணங்களை எடுத்து ஆஜர்படுத்தினார் அதை டிஎஸ்பி 20.01.2013 காலை 10:30 மணியில் டிஎஸ்பி கைப்பற்றுதல் மகஜர் மூலமாக அதை கைப்பற்றினார் மேற்படி மகதலில் முதலாவதாக உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான் என்னுடன் குருசாமி என்பவரும் கையெழுத்து போட்டார் கைப்பற்றுதல் **அ.சா.ஆ.**58. மேற்படி கோமதி என்பவரது பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்புமதிப்பெண் சான்றுகள் இரண்டும் **அ.சா.ஆ.**59. மறுபடியும் நாங்கள் அனைவரும் கோவை வந்து விட்டோம் எதிரிகள் சிவகுரு மற்றும் வெங்கடேசன் ஆகியவர்களை நேரில் பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல இயலும். (எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை ஆஜர் இன்மைக்கு மனு தாக்கல் செய்யப்பட்டது) வழக்கு சம்பந்தமாக காவல்துணை கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்தார். என்னுடன் சாட்சி கையெழுத்து செய்த கிராம நிர்வாக அலுவலர் குருசாமி தற்பொழுது உயிருடன் இல்லை காலமாகிவிட்டார்.

<u>அரசு தரப்பு வேண்டுகோளின்படி முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது</u>.